ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
| திகதி | 2023.01.23 |

# தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கம் 2022 திசெம்பரில் மேலும் வீழ்ச்சியடைந்தது

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (தேநுவிசு, 2013=100)[1] ஆண்டிற்கு ஆண்டு மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறான முதன்மைப் பணவீக்கம், 2022 நவெம்பரின் 65.0 சதவீதத்திலிருந்து 2022 திசெம்பரில் 59.2 சதவீதத்திற்கு மேலும் வீழ்ச்சியடைந்தது. இதேபோன்று, உணவுப் பணவீக்கம் (ஆண்டிற்கு ஆண்டு) 2022 நவெம்பரின் 69.8 சதவீதத்திலிருந்து 2022 திசெம்பரில் 59.3 சதவீதத்திற்கு மேலும் வீழ்ச்சியடைந்த அதேவேளை, உணவல்லாப் பணவீக்கம் (ஆண்டிற்கு ஆண்டு) 2022 நவெம்பரின் 60.4 சதவீதத்திலிருந்து 2022 திசெம்பரில் 59.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் மாதாந்த மாற்றம், 2022 திசெம்பரில் 0.01 சதவீதத்தைப் பதிவுசெய்தது. 0.20 சதவீதத்தால் குறைவடைந்த உணவு வகையிலுள்ள பொருட்களினது விலைத் தாக்கங்களை, உணவல்லா வகையினுள் 0.21 சதவீதத்தால் ஏற்பட்ட விலை அதிகரிப்புடன் எதிரீடு செய்தமை இதற்கு முக்கிய காரணமாக அமைந்தது. அதற்கமைய, உணவு வகையினுள் பெரிய வெங்காயங்கள், கருவாடு, சீனி, காய்கறிகள் மற்றும் அரிசி என்பவற்றின் விலைகளில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சிகள் அவதானிக்கப்பட்டன. எவ்வாறாயினும், மாதகாலப்பகுதியில் தேங்காய், பால்மா மற்றும் உடன் பழங்கள் என்பவற்றின் விலைகள் அதிகரித்தன. 2022 திசெம்பர் மாதக்காலப்பகுதியில் உணவல்லா வகையினுள் ஆடை மற்றும் காலணி, அத்துடன் நானாவிதப் பொருட்கள் மற்றும் சேவைகள் துணை வகைகளில் என்பவற்றின் விலைகளில் அதிகரிப்புக்கள் அவதானிக்கப்பட்டன.

அதேவேளை, ஆண்டுச் சராசரிப் பணவீக்கம் 2022 நவெம்பரின் 46.7 சதவீதத்திலிருந்து 2022 திசெம்பரில் 50.4 சதவீதத்திற்கு உயர்வடைந்தது.

பொருளாதாரத்தின் அடிப்படை பணவீக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற மையப் பணவீக்கம், (ஆண்டிற்கு ஆண்டு) 2022 நவெம்பரின் 60.1 சதவீதத்திலிருந்து 2022 திசெம்பரில் 57.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த அதேவேளை, ஆண்டுச் சராசரி மையப் பணவீக்கம், 2022 நவெம்பரின் 40.0 சதவீதத்திலிருந்து 2022 திசெம்பரில் 43.9 சதவீதத்திற்கு அதிகரித்தது.

| பணவீக்கம் | நவெம்பர் 2022 | திசெம்பர் 2022 |
|---|---|---|
| **முதன்மை** | | |
| சுட்டெண் பெறுமதி | 256.3 | 256.3 |
| மாதாந்த மாற்றம் (%) | -0.2 | 0.0 |
| ஆண்டிற்கு ஆண்டுப் பணவீக்கம் (%) | 65.0 | 59.2 |
| ஆண்டுச் சராசரிப் பணவீக்கம் (%) | 46.7 | 50.4 |
| **மையம்** | | |
| சுட்டெண் பெறுமதி | 244.9 | 245.2 |
| மாதாந்த மாற்றம் (%) | 0.1 | 0.1 |
| ஆண்டிற்கு ஆண்டுப் பணவீக்கம் (%) | 60.1 | 57.5 |
| ஆண்டுச் சராசரிப் பணவீக்கம் (%) | 40.0 | 43.9 |

**தேநுவிசு அடிப்படையிலான பணவீக்கத்தின் அசைவு (ஆண்டிற்கு ஆண்டு சதவீத மாற்றம்)**




**தேநுவிசு இல் மாதாந்த சதவீத மாற்றத்திலான பங்களிப்பு**




[1] தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணானது (2013=100) இலங்கையின் அனைத்து மாகாணங்களிலுமுள்ள வீட்டலகுகள் மூலம் கொள்வனவு செய்யப்படும் பொருட்களின் மற்றும் சேவைகளின் விலைகளிலுள்ள சராசரி மாற்றங்களை எடுத்துக்காட்டுவதற்கு தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் தொகுக்கப்படுகின்றது.

**துணை வகைப்படுத்தல் (ஆண்டிற்கு ஆண்டு மாற்றம்) அடிப்படையில் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கம்**




**தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அசைவுகள் (2013=100)**

| காலம் | | சுட்டெண் | | மாதாந்தச் சதவீத மாற்றம் | | ஆண்டிற்கு ஆண்டு சதவீத மாற்றம் | | ஆண்டுச் சராசரி சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆண்டு | மாதம் | தேநுவி சுட்டெண் | தேநுவிசு (மைய) | தேநுவி சுட்டெண் | தேநுவிசு (மைய) | தேநுவி சுட்டெண் | தேநுவிசு (மைய) | தேநுவி சுட்டெண் | தேநுவிசு (மைய) |
| 2021 | திசெம்பர் | 161.0 | 155.7 | 3.7 | 1.8 | 14.0 | 10.8 | 7.0 | 5.5 |
| 2022 | சனவரி | 166.0 | 159.2 | 3.1 | 2.2 | 16.8 | 12.9 | 8.1 | 6.2 |
| | பெப்புருவரி | 167.8 | 161.2 | 1.1 | 1.3 | 17.5 | 14.1 | 9.3 | 7.1 |
| | மாச்சு | 172.7 | 166.3 | 2.9 | 3.2 | 21.5 | 17.3 | 10.6 | 8.2 |
| | ஏப்பிறல் | 190.3 | 182.3 | 10.2 | 9.6 | 33.8 | 27.9 | 13.0 | 10.2 |
| | மே | 208.7 | 197.9 | 9.7 | 8.6 | 45.3 | 37.7 | 16.3 | 13.0 |
| | யூன் | 231.5 | 215.9 | 10.9 | 9.1 | 58.9 | 49.3 | 20.8 | 16.8 |
| | யூலை | 244.4 | 229.0 | 5.6 | 6.1 | 66.7 | 57.3 | 25.9 | 21.3 |
| | ஓகத்து | 250.4 | 235.1 | 2.5 | 2.7 | 70.2 | 60.5 | 31.3 | 26.0 |
| | செத்தெம்பர் | 256.2 | 241.5 | 2.3 | 2.7 | 73.7 | 64.1 | 36.9 | 31.0 |
| | ஒத்தோபர் | 256.9 | 244.6 | 0.3 | 1.3 | 70.6 | 62.4 | 42.2 | 35.7 |
| | நவெம்பர் | 256.3 | 244.9 | -0.2 | 0.1 | 65.0 | 60.1 | 46.7 | 40.0 |
| | திசெம்பர் | 256.3 | 245.2 | 0.0 | 0.1 | 59.2 | 57.5 | 50.4 | 43.9 |

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்